# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 22 திங்கட்கிழமை 06.01.2025 கதிர் 88







# "அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்"

## யாழ்ப்பாணத்தில் கையெழுத்துப் போராட்டம்




**அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி போராளிகள் நலன்புரிச் சங்கத்தால் முன்னெடுக்கப்படும் கையெழுத்துப் போராட்டம் இன்று யாழ்ப்பாணம் – மடத்தடிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது.**

வடக்கு மாகாணத்தில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி உள்ளிட்ட இடங்களில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்ட நிலையில் இன்று ஏழாவது நாளாக யாழ். மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன், அகில இலங்கை இந்துமா மன்றத்தின் உப தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன்,

7➤

# 13 ஆம் திகதி சீனா பறக்கின்றார் அநுர



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் 13 ஆம் திகதி சீனாவுக்குப் பயணம் மேற்கொள்கின்றார் என இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் அநுரவின் இரண்டாவது

7➤

# புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சியை உடன் ஆரம்பிக்குக!

## அரசிடம் பேராயர் வேண்டுகோள்



புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகளில் அரசு தாமதமின்றி ஈடுபட வேண்டும் என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் கோரிக்கை விடுத்துள்ளார்.

தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காக அரசு, புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்றும்

7➤

# அரிசி விற்பனை குறித்து வடக்கு மாகாணத்தில் 774 சுற்றிவளைப்புக்கள்



அரிசி விற்பனை தொடர்பில் வடக்கு மாகாணத்தில் 774 விசேட சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் வடக்கு மாகாண உதவிப் பணிப் பாளர் அப்துல் லத்தீவ் ஜக்வார் சாதிக் தெரிவித்தார். அரிசி விற்பனை தொடர்பில் கேட்டபோதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

7➤

# கிளிநொச்சியில் இருவர் எலிக்காய்ச்சலால் மரணம்

கிளிநொச்சி மாவட்டத்தில் முழங்காவில் மற்றும் கண்டாவளைப் பகுதிகளில் இருவர் திடீரெனச் சுகவீனமுற்று உயிரிழந்துள்ளனர்.

7➤




# யாழ். பல்கலை முன்றலிலும் கையெழுத்துப் போராட்டம்



நீண்டகாலமாக விசாரணையின்பேரில் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி வடக்கு - கிழக்குத் தழுவி முன்னெடுக்கப்படும் கையெழுத்துப் போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் இன்று யாழ். பல்கலைக்கழக முன்றலில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றித் தலைவர் கு.துவாரகன் மற்றும் ஒன்றியத்தின் செயலாளர் சி.சிவகஜன் ஆகியோரால் கையெழுத்திட்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட போராட்டத்தில் அனைத்துப் பீடங்களினதும் மாணவர் ஒன்றியத் தலைவர்கள் உள்ளிட்ட பல்கலைக்கழக மாணவர்கள் ஒப்பமிட்டு போராட்டத்துக்கு வலுச் சேர்த்தனர்.

தொடர்ந்து, அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் "வெஞ்சிறையின் குரல்" எனும் பாடல் பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தினரால் குறித்த போராட்டத்தின் நிறைவில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

அக்கினிச் சிறகுகள் அமைப்பினால்

7➤

# சுண்ணக்கல் அகழ்வின் விளைவுகளுக்கு அரச அதிகாரிகள் பொறுப்புக்கூற வேண்டும்





யாழ்ப்பாணம், ஜன 06

யாழில் இடம்பெற்றுவரும் சுண்ணக்கல் அகழ்வின் விளைவுகளுக்கு அரச அதிகாரிகள் பொறுப்புக்கூற வேண்டும் என அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் காட்டமாக தெரிவித்துள்ளார்.

யாழ். தென்மராட்சியில் சட்ட விரோதமான முறையில் சுண்ணக்கல் அகழப்படுவதாக கூறப்படும் இடங்களை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர நேற்றையதினம் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார். இதன்போது கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேலும், சுண்ணக்கல் அகழ்வு தொடர்பில் விசாரணைகள் அனைத்தும் மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் இதன்போது உறுதியளித்தார்.

தென்மராட்சிப் பிரதேசத்தின் சரசாலை வடக்கு மற்றும் மந்துவில் பகுதிகளில் அதிகளவான சுண்ணக்கல் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறித்த இடங்களுக்கு நேரில் சென்று களநிலவரங்களை அமைச்சர் இதன்போது ஆராய்ந்தார்.

இதன்போது. அமைச்சருடன் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன மற்றும் அதிகாரிகள் சிலரும் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மோட்டார் சைக்கிளில் மோதுண்டு இளைஞன் பரிதாபமாக உயிரிழப்பு



கொழும்பு, ஜன 06

காலி - கொழும்பு பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தொடந்துவ மற்றும் குமாரகந்த சந்திப்பில் நேற்று முன்தினம் இரவு 7.45 மணியளவில் விபத்து இடம்பெற்றுள்ளது.

முன்னால் சென்ற வெளிநாட்டவர் ஒருவரின் மோடடார் சைக்கிளுடன் மோதுண்டு விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது தூக்கியெறியப்பட்ட இளைஞன் எதிரில் வந்த பேருந்தில் மோதுண்டு ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோதர பட்டுவத்த, தொடந்துவ பகுதியை சேர்ந்த 25 வயதான சந்தீப் லக்ஷனா என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இரண்டு நாட்களில் திருமணம் நடைபெறவுள்ள நிலையில், இளைஞன் விபத்தில் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த வெளிநாட்டவர் மற்றும் பேருந்து சாரதி ஆகியோர் ஹிக்கடுவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சடலம் கராப்பிட்டிய தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தமிழ் தேசியத்துடன் ஒன்றிணைந்து வாழாத சுமந்திரன்

யாழ்ப்பாணம், ஜன 06

சித்தாந்த அரசியலை முன்னெடுத்து வருவதாக இலங்கை தமிழரசுக் கட்சி மீது விசனங்கள் அடுக்கப்படுகிறது. இந்த சூழலில் அக்கட்சிக்குள் தற்போது உள்ள பிளவு நிலையானது எதிர்கால தமிழ் தேசிய அரசியலுக்கு பெரும் சவாலாக மாறிவிடும் எனும் அச்சமும் வெளிவர ஆரம்பித்துள்ளது.

2024 ஆம் ஆண்டு இடம்பெறவிருந்த உள்ளூராட்சி தேர்தலில் தனித்து போட்டியிடும் நோக்கோடு தமிழ்தேசிய கூட்டமைப்பில் இருந்து தமிழரசுக் கட்சி வெளிவந்தது.

எனினும், ஒன்றிரண்டு அணி-களாக இருந்த கட்சிகள், ஐந்துக்கும் மேற்பட்ட அணிகளாகப் பிரிந்தமை, தமிழ் தேசிய சக்திகள் தோற்றது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தியி-ருக்கிறது என சில கருத்துக்களும் முன்வைக்கப்படுகின்றன.

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் கட்சி எடுக்கவிருந்த முடிவு வெளியாகும் முன்னர் சிறிதரன் எடுத்த முடிவே, கட்சிக்குள் இரு அணிகள் என்ற பிரிவை உண்டாக்கியதாகவும் கூறப்படுகிறது.

கட்சி முடிவெடுப்பதற்கு முன் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கும் முடிவை சிறீதரன் எடுத்திருந்தார்

அவர், பொது வேட்பாளரைக் களமிறக்கிய ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி முன்மொழிந்த தமிழ் பொதுவேட்பாளரை ஆதரித்து தீவிரமான பிரசாரங்களிலும் ஈடுபட்டார்.

இதன் விளைவு கட்சிக்குள் இரு அணிகள் என்ற பிரிவை உண்டாக்கிவிட்டது என்பதே நடைமுறை கருத்தாடல்

இவ்வாறான விசன பரம்பலுக்கு மத்தியில், லங்காசிறியின் ஊடறுப்பு நிகழ்ச்சியில் கலந்துக்கொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன், பல்வேறு கருத்துக்களை கட்சியுடன் சார்ந்து விளக்கியிருந்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தமிழ் தேசியத்துடன் ஒன்றினைந்து வாழாதவர் என்றும், தமிழ் தேசியம் என்பது அரசியலுக்கு அப்பாற்பட்ட உணர்வு எனவும் கூறியுள்ளார்.

மேலும் ஏனைய தமிழ் கட்சி-களுடன் ஒப்பிட்டு தமிழரசுக்கட்சியை பார்க்கும் சிலரின் கண்ணோட்டமும் பிளவு நிலைக்கு தள்ளும் எனவும் கூறியுள்ளார் (ஐ)

## பொலிஸார் வழங்கியுள்ள அறிவுறுத்தல்

*யாழ்ப்பாணம், ஜன 06*

*யாழ். மக்கள் பயப்படத் தேவையில்லை என்றும், பொதுமக்கள் அச்சமின்றி செயல்படவும் சட்டம் ஒழுங்கை நிறைவேற்றவும் பொலிஸார் தயாராக இருக்கின்றார்கள் எனவும், மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜெயசிங்க அறிவுறுத்-தியுள்ளார்.*

*யாழ்நகரில் புத்தாண்டிக்கு முன்னிரவு இளைஞர் ஒருவர் மீது நடத்தப்பட்ட கொலைவெறி தாக்குதல் தொடர்பாக கேள்வியெழுப்பியபோது மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் இதனை கூறியுள்ளார்.*

*மேலும் தெரிவிக்கையில்,*

*“கடந்த வாரத்தில் யாழ். நகரில் நடை-பெற்ற வன்முறைச் சம்பவம் பொதுமக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.*

*குறித்த சம்பவம் தொடர்பில் நான்கு குற்றவாளிகளை கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தி இருக்கின்றோம்.*

*இரண்டு சம்பவங்களையும் குறித்து புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். மேலதிக சாட்சிகளை எடுத்து மிகுதியான சந்தேக நபர்களை கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டுள்ளோம்.*

*இதற்குரிய ஆலோசனைகள் என்னால் உயர் அதிகாரிகளுக்கும் பொலிஸ் உயர-திகாரிகளுக்கும் பொறுப்பதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.*

*குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களைப் பிடித்து குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் 81வது பிரிவின் கீழ் வழக்குத் தாக்-கல் செய்து வருகின்றோம். இனிவரும் காலங்களில் குறித்த நபர்கள் அவ்வா-றான குற்றச்செயல்களில் ஈடுபடாமல் இருப்பதற்காக கட்டுக்கோப்பான சட்டப் பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்து நீதி-மன்றத்தில் ஆணையை பெற்று வருகி-ன்றோம்“ என்றார். (ஐ)*

## எகிறிய பச்சை மிளகாய் விலை!



சந்தையில் ஒரு கிலோ கிராம் பச்சை மிளகாய் 1000 ரூபாவுக்கும் அதிகமாக விற்பனை செய்யப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் மரக்கறிகளின் விலை சடுதியாக அதிகரித்துள்ளதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே மழையின் தாக்கத்தால் மரக்கறிகளின் விலை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் குறிப்பிடுகின்றனர்.

எனினும் கெப்பெட்டிபொல விசேட பொருளாதார மத்திய நிலையத்திற்கு கொண்டு வரப்படும் மரக்கறிகளை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் கூறியுள்ளனர்.

மேலும் மரக்கறிகளுக்கு உரிய விலை கிடைப்பதில்லை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஐ)

# கடன் வலையில் சிக்கி 200 பெண்கள் மரணம்

கொழும்பு, ஜன 06

இலங்கையில் கடந்த சில வருடங்களில் நுண்நிதிக் கடன் வலையில் சிக்கிய சுமார் 200 பெண்கள் தங்களது உயிர்களை மாய்த்துக் கொண்டுள்ளதாகத் தேசிய மகளிர் ஒன்றியத்தின் தலைவி ஹாஷினி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்நாட்டில் 28 இலட்சம் பேர் நுண்நிதிக் கடன் பெறுகின்றனர், அதில் 24 இலட்சம் பேர் பெண்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இலங்கையிலுள்ள நுண் நிதி நிறுவனங்கள் 38 தொடக்கம் 40 சதவீதம் வரை அதிக வட்டிக்கு கடன் வசதிகளை வழங்குவதாகவும், கடனை செலுத்த முடியாத சில பெண்களும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் சில பிரதிநிதிகளினால் பாலியல் பலாத்காரத்திற்கு ஆளாவதாகவும் ஹாஷினி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்நிலைமையினால் குடும்பங்களுக்கிடையில் முரண்பாடுகள் வளர்ந்து பிள்ளைகள் ஆதரவற்றவர்களாக மாறியுள்ளதாகவும், சில பெண்கள் வேலை செய்ய வீட்டையும் நாட்டையும் விட்டு வெளியேறத் தூண்டப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், சிறு நிதி கடன் பிரச்சினையால் கிராமப்புறங்களில் உள்ள பெண்கள் கடுமையான பொருளாதார அழுத்தத்தில் உள்ளனர். அவர்களில் பலர் வருமானம் ஈட்டும் வாய்ப்புகள் இல்லாமல், பதிவு செய்யப்பட்ட வங்கிகளில் கடன் பெற முடியாமல் நுண்கடன் நிறுவனங்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிறுவனங்கள் வாரத்திற்கு 20 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை அதிக வட்டி வீதங்களுடன் வசூலிக்கின்றன, இதனால் பெண்கள் கடனில் தள்ளப்படுகிறார்கள். நுண்கடன் நிறுவனங்களை ஒழுங்குபடுத்தும் சட்ட மூலத்தை அரசாங்கம் கொண்டு வந்துள்ள போதிலும், அது இன்னும் சரியாக நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## "க்ளீன் ஸ்ரீலங்கா"வால் வந்த சிக்கல்

கொழும்பு, ஜன 06

க்ளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தால் தங்களது தொழில்துறை பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகக் கூறும் பேருந்து உரிமையாளர்கள் சங்கங்களின் பிரதிநிதிகள் பொலிஸ்மா அதிபரை சந்திக்க தீர்மானித்துள்ளனர்.

க்ளீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ், சிவில் உடையில் அதிகாரிகள் பணியில் அமர்த்தப்பட்டு, பயணிகள் பேருந்துகளை ஆய்வு செய்வதுடன், போக்குவரத்து விதிமீறல்கள் குறித்து சாரதிகளை எச்சரிக்கும் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

எவ்வாறாயினும், பொலிஸ் சோதனைகள் காரணமாக தங்களது பணிகளைத் தொடர்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகப் பேருந்து சங்கங்களின் பிரதிநிதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்தின் கீழ் பேருந்துகளுக்குள் சென்று சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக ஏற்பாடுகள் எதுவும் இல்லை என அவர்கள் கூறுகின்றனர்.

வேகத்தடையை நிர்ணயிக்கும் வீதி சமிக்ஞை இல்லாத இடங்களில் வேகமாக வாகனத்தைச் செலுத்துகின்றமைக்காக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது.

எனவே, பிரதி பொலிஸ்மா அதிபருடனான சந்திப்பில் உரிய வகையில் தீர்வு கிடைக்காவிடின் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட வேண்டிய கட்டாயத்துக்கு தாங்கள் தள்ளப்படுவதாகப் பேருந்துகள் உரிமையாளர்கள் சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர். (ஐ)

## உயிரைக் காப்பற்றுவதற்காக ஆற்றில் குதித்தவர் சாவு



கொழும்பு, ஜன 06

யானையின் தாக்குதலில் இருந்து உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஆற்றில் குதித்த குடும்பஸ்தர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவி லுள்ள மயில வெட்டுவான் வீரகட்டு பகுதியில் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் மட்டக்களப்பு மயில வெட்டுவான் உப்போடை வீதியைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான 50 வயதுடைய கணபதிப்பிள்ளை கருணாகரன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவ தினத்தில் காலை தனது 14 வயதுடைய மகனுடன் விறகு வெட்டுவதற்காக தோணியில் விரகட்டுமுனை பகுதிக்குச் சென்று விறகு வெட்டி வரும் வழியில் காட்டு யானை துரத்தி உள்ளது யானை தாக்குதலுக்கு பயந்து தந்தையும் மகனும் ஆற்றில் பாய்ந்துள்ளனர். மகன் நீந்தி ஆற்றை கடந்த நிலையில் தந்தை ஆற்றில் நீர் அடித்துச் செல்லப்பட்டுள்ளார்.

பிரதேச மக்கள் பல மணி நேரம் ஆற்றில் தேடிய நிலையில் மாலை வேளை சடலமாக மீட்கப்பட்டார்.

ஏறாவூர் திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம். நசீர் கரடியனாறு பொலிஸாருடன் சம்பவ இடத்திற்கு சென்று சடலத்தை பார்வையிட்டு முதற்கட்ட விசாரணையில் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

கரடியனாறு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், சடலம் தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் உடல் கூறு பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு ஏறாவூர் பற்று பிரதேசத்தில் காட்டு யானைகளின் தாக்குதலால் பலர் கொல்லப்பட்டதுடன் வேளாண்மை உட்பட பல சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தியுள்ளது. கடந்த ஓரிரு தினங்களாக சித்தாண்டி மற்றும் வந்தாறுமூலை கிராமங்களுக்குள் காட்டு யானைகள் புகுந்து மரங்களை சேதப்படுத்திய சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

குறித்த பகுதிகளில் உள்ள யானை வேலிகள் சேதமடைந்து காணப்படுவதனால் யானைகள் இலகுவாக கிராமங்களுக்குள் நுழைகின்றன. இது தொடர்பாக பொதுமக்கள் உரிய அதிகாரிகளிடம் பலமுறை முறையிட்ட போதிலும் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கவில்லை என பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மாலை வேளையில் காட்டிலிருந்து வெளியேறும் யானைகள் காலையிலேயே மீண்டும் செல்கின்றன. இதனால் தமது வயல்களுக்கு செல்பவர்கள் உயிர் அபாயத்துக்கு மத்தியிலேயே செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி காட்டு யானைகள் ஊருக்குள் வருவதை கட்டுப்படுத்த நிலையான தீர்வொன்றை பெற்றுத் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர். (ஐ)

## வியாபாரத்தில் ஈடுபட்டவர் மரணம்

கொழும்பு, ஜன 06

அலைபேசி ஊடாக வியாபார செயற்பாட்டில் ஈடுபட்டவர் தன் உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவில் இடம் பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் சாய்ந்தமருது 11 உடையார் வீதியில் வசித்து வந்த முஹம்மட் நயீம் முஹம்மட் நப்லான் (வயது 20) என்ற இளைஞனே விரக்தி அடைந்த நிலையில் ஒரு வகையான மாத்திரைகள் உட்கொண்டு சிகிச்சை பலனளிக்காமையின் காரணமாக கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் ஞாயிற்றுக்கிழமை மாலை மரணமடைந்துள்ளார்.

குறித்த மரணமடைந்தவரின் சடலம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் சவளக்கடை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். மேலும் மரணம் அடைந்த இளைஞன் சவளக்கடை பொலிஸ் பிரிவில் உள்ள அரிசி ஆலை ஒன்றில் கணக்காளராக பணிபுரிந்து வருகிறார்.

மரணமடைந்த இளைஞரின் தந்தை தனது மகன் வெளிநாட்டில் தொழில் புரிவதற்கான முன்னாயத்தங்கள் மேற்கொண்டதாகவும் அதற்காக அரிசி ஆலை ஒன்றில் கணக்காளராக சேர்த்ததாகவும் இதன்போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அண்மைக்காலமாக அம்பாறை மாவட்டத்தில் இவ்வாறான அலைபேசி ழுடெைநெ ஊடாக புதிய வகை வியாபார உத்திகள் உருவாக்கப்பட்டு கொடுக்கல் வாங்கல் இளைஞர் முதல் பல்வேறு தரப்பினரை இலக்கு வைத்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

குறித்த வியாபாரம் சட்டவிரோதமானது என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அதில் ஆர்வம் கொண்டு பல இளைஞர்கள் முதல் பலர் பங்கேற்று வருகின்றனர். (ஐ)

## மருமகள் துஷ்பிரயோகம்

கொழும்பு, ஜன 06

எட்டாம் தரத்தில் கல்வி கற்கும் 15 வயது 05 மாத சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய மாமா ஒருவரை மொனராகலை பொலிஸார் ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ள சம்பவம், மொனராகலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மதுரேகெட்டிய தலாவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. சந்தேகநபர் சுமார் நான்கு வருடங்களாக சிறுமியின் வீட்டில் வசித்து வருவதாகவும், தனது தாயும் சகோதரி யும் வீட்டில் இல்லாத நேரத்தில் தனது மாமா தன்னை பாலியல் வன்கொடுமை செய்ததாக தாயிடம் கூறியதையடுத்து தாயார் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக மொனராகலை மாவட்ட பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மொனராகலை தலைமையக பொலிஸ் பரிசோதகர் பி.எஸ்.சர்மிந்த சஞ்சீவ மற்றும் அதிகாரிகள் குழுவொன்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

## விபத்தில் சிறுவன் பலி

கொழும்பு, ஜன 06

இராஜாங்கனை - அனுராதபுரம், புத்தளம் பிரதான வீதியில் புத்தளத்திலிருந்து அனுராதபுரம் நோக்கி பயணித்த முச்சக்கரவண்டி ஒன்று நேற்றிரவு வீதியில் கவிழ்ந்து எதிரே வந்த பஸ்ஸுடன் மோதியதில் சிறுவன்ஒருவர் உயிரிழந்தார். நாயுடன் மோதுவதைத் தவிர்க்க முற்பட்ட வேளையில் முச்சக்கரவண்டி கவிழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் முச்சக்கரவண்டியின் சாரதியும், பின் இருக்கையில் பயணித்த சிறுவனும் காயமடைந்து நொச்சியாகம வைத்தியசாலையில் அனுமதிக கப்பட்ட நிலையில் சிறுவன் உயிரிழந்தார். சாரதி மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றியனுப்பப்பட்டுள்ளார். சிலாபம் - வெலிஹேன பிரதேசத்தில் வசிக்கும் 12 வயது சிறுவனே இவ்வாறு உயிரிழந்தார். பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், ராஜாங்கனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# தலை தூக்கும் கடவுச்சீட்டு பிரச்சினை

கொழும்பு, ஜன 06

புதிய கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்வதற்கான உத்தரவை அரசாங்கம் இதுவரை வழங்காத நிலையில், கடவுச்சீட்டு தட்டுப்பாடு தொடருமானால், இலங்கையர்கள் பணி நிமித்தம் நாட்டை விட்டு வெளியேறுவதில் சிக்கல்கள் ஏற்படலாம் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் எச்சரித்துள்ளது. எதிர்வரும் சில வாரங்களில் நடைபெறவுள்ள கொரிய மொழித் தேர்ச்சிப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள இலங்கையர்களிடமிருந்து அதிகளவான கடவுச்சீட்டுக்கான விண்ணப்பங்கள் குவியும் எனவும், கொரிய மொழித் தேர்ச்சிப் பரீட்சையில் தோற்றுவதற்கு கடவுச்சீட்டு இலக்கத்தை வழங்குவது கட்டாயம் எனவும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு அடுத்த சில வாரங்களில் சுமார் 30,000 கடவுசீட்டு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. வேலைக்காக வெளிநாடு செல்ல விரும்பும் இலங்கையர்கள் கடவுச்சீட்டு பெறுவதில் தொடர்ந்தும் சிக்கல்கள் ஏற்படுமானால், இலங்கைக்கு கிடைக்கும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் வேறு நாடுகளுக்கு திருப்பி விடப்படும் அபாயம் இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன

(ஐ)

# தமிழ்நாட்டில் எல்லை விரிவாக்கம்: ஆட்சேபனை தெரிவிக்க உத்தரவு!





தமிழ்நாட்டில் மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளின் எல்லையை விரிவாக்கம் செய்து தமிழக அரசு மறுசீரமைப்பு மேற்கொள்ள உத்தேசப்பட்டியல் தயாரித்துள்ள நிலையில் தமிழக அரசு இதுதொடர்பான ஆட்சேபனைகளை 6 வாரங்களில் தெரிவிக்கலாம் என்று அறிவித்துள்ளது.

இதன்படி மாநகராட்சி பகுதிகளை ஒட்டிய பஞ்சாயத்துக்கள் சிலவற்றை இணைக்க முடிவு எட்டப்பட்டுள்ளது. அதேபோல் நகராட்சி பகுதிகளில் உள்ள சில பஞ்சாயத்துகள் அந்தந்த நகராட்சிகளுடன் இணைய உள்ளது. மொத்தத்தில் 16 மாநகராட்சிகளுடன் 4 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 149 ஊராட்சிகள் இணைய இருக்கிறது. இதுதவிர புதிதாக 13 நகராட்சிகள் உருவாக உள்ளது. இதற்கு பல ஊராட்சிகளில் எதிர்ப்பு கிளம்பி உள்ள நிலையில் இதுதொடர்பாக 5 அரசாணைகளை அரசு வெளியிட்டுள்ளது.

இந்த அரசாணைகளை அரசிதழில் வெளியிட்டுள்ள தமிழக அரசு இதுதொடர்பான ஆட்சேபனைகளை 6 வாரங்களில் தெரிவிக்கலாம் என்று அறிவித்துள்ளது.

இதன்படி முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை தலைமை செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை என்ற முகவரிக்கு ஆட்சேபனைகளை அனுப்பலாம் என்று தமிழக அரசு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சட்டசபையில் இருந்து ஆளுநர் வெளியேறியது ஏன்? காரணத்தை வெளியிட்ட ஆளுநர் மாளிகை!



சட்டசபையின் நடப்பாண்டு முதல் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக சட்டசபைக்குள் நுழைந்த ஆளுநர் ஆர்.என். ரவி உரையாற்றாமல் சட்டசபையில் இருந்து சென்ற நிலையில் இதுதொடர்பாக ஆளுநர் மாளிகை விளக்கம் அளித்தது.

ஆளுநர் மாளிகை விளக்கத்தை அனைத்து ஊடகங்களும் வெளியிட்ட நிலையில் அதனை ஆளுநர் மாளிகை நீக்கியது.

இந்நிலையில் ஆளுநர் வெளியேறியது தொடர்பான விளக்கம் நீக்கப்பட்ட நிலையில் மீண்டும் எக்ஸ்தளத்தில் பதிவிடப்பட்டுள்ளது. ராஜ்பவன் வெளியிட்டுள்ள எக்ஸ் தளபதிவில்,

தமிழ்நாடு சட்டப்பேரவையில் இன்று மீண்டும் பாரதத்தின் அரசியலமைப்பு மற்றும் தேசிய கீதம் அவமதிக்கப்பட்டன. தேசிய கீதத்தை மதித்தல் என்பது நமது அரசியலமைப்பில் வகுக்கப்பட்டுள்ள முதலாவது அடிப்படைக் கடமையாகும். அது அனைத்து சட்டப்பேரவைகளிலும் ஆளுநர் உரையின் தொடக்கத்திலும் முடிவிலும் பாடப்படுகிறது. இன்று ஆளுநர் அவர்கள் பேரவைக்கு வரும்போது தமிழ்த்தாய் வாழ்த்து மட்டும் பாடப்பட்டது. ஆளுநர் அவர்கள் பேரவையிடம் அதன் அரசியலமைப்பு கடமையை மரியாதையுடன்நினைவு கூர்ந்ததுடன் , தேசிய கீதத்தைப் பாடுவதற்காக அவைத் தலைவரான முதலமைச்சர் அவர்களிடமும் சட்டப்பேரவை சபாநாயகர் அவர்களிடமும் உருக்கமாக வேண்டுகோள் விடுத்தார். ஆனால், அவர்கள் திட்டவட்டமாக மறுத்துவிட்டனர். இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

அரசியல் சாசனம் மற்றும் தேசிய கீதத்தை அவமதிக்கும் செயல்களுக்கு உடந்தையாக இருந்து விடக்கூடாது என்பதால் ஆளுநர் அவர்கள் கடும் வேதனையுடன் சட்டப்பேரவையை விட்டு வெளியேறினார் என அந்த பதிவில் அதில் கூறப்பட்டுள்ளது.

## பல்கலை வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட அ.தி.மு.க.வினர் கைது!



சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்து போராட்டத்தில் ஈடுபட்ட அ.தி.மு.க. மாணவரணியினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த அண்ணா பல்கலைக்கழக வளாகம் முன்பு அ.தி.மு.க.வின் மாணவரணி செயலாளர் சிங்கை ராமச்சந்திரன் தலைமையில் போராட்டம் நடைபெற்றது.

அண்ணா பல்கலை. முன்பாக அ.தி.மு.க.வினர் போராட்டம் நடத்துவதற்கு பொலிஸார் அனுமதி மறுப்பு தெரிவித்த நிலையில் சிங்கை இராமச்சந்திரன் தலைமையில் போராட்டத்தில் ஈடுபட்ட அ.தி.மு.க.வினரை கைது செய்தனர்.

மாணவர்களால் மாணவர்களுக்காக ஒன்றிணைவோம் என்ற பேட்ஜ் அணிந்து போராட்டத்தில் ஈடுபட்ட அ.தி.மு.க.வினரை பொலிஸார் கைது செய்தனர்.

# சீனாவில் வேகமாக பரவும் புதிய வைரஸ்: இந்தியாவில் முதல் பாதிப்பு!







சீனாவில் கடந்த 2019-ம் ஆண்டு இறுதியில் உருவான கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவி பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இந்த நிலையில் தற்போது சீனாவில் புதிய வைரஸ் ஒன்று பரவி வருகிறது.

எச்.எம்.பி.வி என அழைக்கப்படும் இந்த வைரஸால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். கொரோனாவை போன்றே இந்த வைரஸால் காய்ச்சல், இருமல், சளி, தொண்டை வலி உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்படுகின்றன. சீனாவின் வடக்கு மாகாணங்களில் வைரஸ் பாதிப்பு அதிகமாக உள்ளது. இதில் சிறுவர்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சீனாவில் வைரஸ் பரவலால் மற்ற நாடுகளும் அவதானமாக உள்ளன. இந்தியாவில் உள்ள கேரளா, ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களில் அரசு தீவிர கண்காணிப்புடன் இருந்து வருகிறது. இந்நிலையில் இந்தியாவில் முதல் மனித மெட்டாப்நியூமோவைரஸ் வைரஸ் தொற்று பாதிப்பு கர்நாடகாவில் கண்டறியப்பட்டுள்ளது.

பெங்களூருவை சேர்ந்த 8 மாத குழந்தைக்கு எச்.எம்.பி.வி தொற்று பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

குழந்தை எங்கும் அழைத்துச் செல்லப்படாதபோதிலும் வைரஸ் பாதிப்பு எப்படி ஏற்பட்டது என்ற குழப்பம் ஏற்பட்டுள்ளது. எச்.எம்.பி.வி வைரஸ் பாதிப்பை உறுதி செய்த தனியார் மருத்துவமனை அறிக்கையை கர்நாடக மாநில சுகாதரத்துறையும் உறுதி செய்துள்ளது. குழந்தை கண்காணிப்பில் உள்ளதாகவும், மத்திய சுகாதார அமைச்சகத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதுள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

முன்னதாக சுவாச நோய்களை, கண்காணிப்பு வழிமுறைகளுடன் கையாள இந்தியா முழுமையாகத் தயாராக உள்ளது,

இந்த தொற்று பாதிப்புகளில், அசாதாரண பரவல் என்பது இல்லை என மத்திய சுகாதார அமைச்சகம் விளக்கம் அளித்திருந்தது. கடந்த சனிக்கிழமை கூட்டு கண்காணிப்புக் குழு கூட்டமும் நடத்தியது குறிப்பிடத்தக்கது.



> உண்மையான ஆதரவைத் தேடுங்கள். சாதனைகளுக்கு அப்பால் நீங்கள் யார் என்பதைப் பாராட்டி ஆத ரிக்கும் நபர்களுடன் உங்களைச் சுற்றி வையுங்கள். திறந்த உரை யாடல்கள் அவசியம். முன்னோக்கு மற்றும் ஊக்கத்தைப் பெற நம்ப- கமான நண்பர்கள் அல்லது ஒரு சிகிச்சையாளருடன் நேர்மையான உரையாடல்களில் ஈடுபடுங்கள்.



# சமூக அழுத்தத்தோடு போராடும் பெண்கள்!

இன்றைய உலகில் பெண்கள் பெரும்பாலும் எதிர்பார்ப்புகள் மற்றும். சமூக அழுத்தங்களின் (Social Pressure) . சிக்கலான நிலப்பரப்பில் தங்களைத் தாங்களே வழிநடத்துவதைக் காணமுடிகிறது. அது கலாசார விதிமுறைகளுக்கு இணங்கினாலும், ஊடக சித்தரிப்புகளுடன் தன்னை ஒப்பிட்டுக் கொண்டாலும் அல்லது சக செல்வாக்கின் எடையை உணர்ந்தாலும், முழுமைக்கான தேடலானது மன ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை பாதிக்கலாம். இந்த கட்டுரை சமூக அழுத்தத்தின் உண்மைகளை ஆராய்வதோடு, நம்பகத்தன்மையையும் சுய இரக்கத்தையும் ஏற்றுக்கொள்வதற்கு பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் செயல் உத்திகளை வழங்குகிறது.

### கலாசார விதிமுறைகள்:

பெண்கள் எவ்வாறு தோற்றமளிக்க வேண்டும், நடந்துகொள்ள வேண்டும், வெற்றியை அடைய வேண்டும் என்பதில் சமூகம் பெரும்பாலும் கடுமையான தரநிலைகளை விதிக்கிறது.

### ஊடகப் பிரதிநித்துவம்:

ஊடகங்களில் உள்ள சிறந்த படங்கள் மற்றும் கதைகள் நம்பத்தகாத எதிர்பார்ப்புகளை உருவாக்குகின்றன.

### நண்பர்களின் செல்வாக்கு:

நண்பர்கள், சக பணியாளர்கள் மற்றும் செல் வாக்கு செலுத்துபவர்களுடனான ஒப்பீடுகள் போதாமை மற்றும் சுய சந்தேகத்தை தூண்டும்.

### கவலை மற்றும் மன அழுத்தம்:

அடைய முடியாத பரிபூரணத்திற்காக தொடர்ந்து பாடுபடுவது அதிக பதற்றம் மற்றும் நாள்பட்ட மன அழுத்தத்திற்கு வழிவகுக்கும்.

### இம்போஸ்டர் சிண்ட்ரோம்:

சாதனைகள் இருந்தபோதிலும், குறைபாடற்ற செயல்திறனில் நம்பிக்கையின் காரணமாக தனிநபர்கள் மோசடி செய்பவர்களாக உணரலாம்.

சோர்வு: அதிக வேலை மற்றும் உச்சநிலைக்கு தன்னைத் தள்ளுவது உடல் மற்றும் உணர்ச்சி சோர்வை ஏற்படுத்தும்.

### குறைக்கப்பட்ட சுயமரியாதை:

தொடர்ச்சியான ஒப்பீடு மற்றும் சுய-விமர்சனம் சுய மதிப்பையும் நம்பிக்கையையும் குறைக்கும்.

சமூக அழுத்தத்தை சமாளிப்பதற்கான உத்திகளாக, சுய இரக்கத்தைப் பயிற்சி செய்யுங்கள். உங்களிடம் அன்பாக இருங்கள். அன்புக்குரியவருக்கு நீங்கள் வழங்கும் அதே பச்சாதாபத்துடனும் புரிதலுடனும்



உங்களை நடத்துங்கள். குறைபாடுகளை ஒப்புக்கொள்ளுங்கள். குறைபாடுகள் இயற்கையானது மற்றும் மனித அனுபவத்தின் ஒரு பகுதி என்பதை அங்கீகரிக்கவும். யதார்த்தமான இலக்குகளை அமைத்து முன்னேற் றத்தில் கவனம் செலுத்துங்கள். முழுமையை அடைவதில் இருந்து நிலையான முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிக்கு கவனம் செலுத்துங்கள்.

நல்வாழ்வுக்கு முன்னுரிமை கொடுங்கள். தனிப்பட்ட மதிப்புகளுடன் இலக்குகளை சீரமைத்து ஒட்டுமொத்த மகிழ்ச்சியையும் ஆரோக்கியத்தையும் மேம்படுத்தும் செயல்பாடுகளுக்கு முன்னுரிமை கொடுங்கள்.

சமூக ஊடக பயன்பாட்டை வரம்பிடவும். உங்கள் ஊட்டத்தை ஒழுங்கமைக்கவும். ஒப்பீடு மற்றும் பாது காப்பின்மையை வளர்ப்பதற்குப் பதிலாக ஊக்குவிக்கும் மற்றும் மேம்படுத்தும் கணக்குகளைப் பின்பற்றவும்.

இடைவேளை எடுங்கள். உங்களுடனும் நிஜ வாழ்க்கை அனுபவங்களுடனும் மீண்டும் இணைவதற்கு சமூக ஊடகங்களிலிருந்து தொடர்ந்து தொடர்பைத் துண்டிக்கவும். ஓர் ஆதரவான சமூகத்தை உருவாக்குங்கள்.

உண்மையான ஆதரவைத் தேடுங்கள். சாதனைகளுக்கு அப்பால் நீங்கள் யார் என்பதைப் பாராட்டி ஆதரிக்கும் நபர்களுடன் உங்களைச் சுற்றி வையுங்கள்.

திறந்த உரையாடல்கள் அவசியம். முன்னோக்கு மற்றும் ஊக்கத்தைப் பெற நம்பகமான நண்பர்கள் அல்லது ஒரு சிகிச்சையாளருடன் நேர்மையான உரையாடல்களில் ஈடுபடுங்கள். பாதிப்பை தழுவுங்கள். உங்கள் உண்மையான சுயத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள். பலம் மற்றும் பாதிப்புகள் இரண்டையும் தழுவி, உங்களைப் பார்க்க அனுமதிக்கவும். பின்னடைவுகளில் இருந்து கற்றுக்கொள்ளுங்கள். சவால்கள் மற்றும் தோல்விகளை வளர்ச்சி மற்றும் பின்னடைவுக்கான வாய்ப்புகளாகப் பார்க்கவும்.

பல குறிப்பிடத்தக்க பெண்கள் முழுமையின் மீது நம்பகத்தன்மையைத் தழுவி, தங்கள் பயணங்களின் மூலம் மற்றவர்களை ஊக்குவிக்கிறார்கள். மைக்கேல் ஒபாமா மற்றும் ப்ரெனே பிரவுன் போன்ற நபர்கள் தங்கள் போராட்டங்களை பரிபூரணவாதத்துடன் வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்கிறார்கள், சுய இரக்கம் மற்றும் உண்மையான சுய வெளிப்பாட்டிற்காக வாதிடு கின்றனர். அபூரணமானது ஒரு தடையல்ல, ஆனால் வலிமை மற்றும் இணைப்புக்கான ஆதாரம் என்பதை அவர்களின் கதைகள் நமக்கு நினைவூட்டுகின்றன.

சமூக ஊடக நுகர்வு குறைத்தல் அல்லது அடையக்கூடிய தினசரி இலக்குகளை அமைத்தல் போன்ற நிர்வகிக்கக்கூடிய மாற்றங்களுடன் தொடங்குங்கள்.

பிரதிபலிக்கவும் கொண்டாடவும் கற்றுக்கொள்ளுங்கள். தொடர்ந்து முன்னேற்றத்தை ஒப்புக்கொண்டு, சிறு வெற்றிகளைக் கூட வழியில் கொண்டாடுங்கள்.

சுய-கவனிப்பில் ஈடுபடுங்கள். உடற்பயிற்சி, பொழுதுபோக்குகள் மற்றும் தளர்வு நுட்பங்கள் உட்பட உங்கள் நல்வாழ்வை வளர்க்கும் செயல்களுக்கு முன்னுரிமை கொடுங்கள்.

உங்கள் பயணத்தைத் தழுவுதல் சமூக அழுத்தத்தை சமாளிப்பது என்பது தன்னைத்தானே கண்டுபிடிப்பது மற்றும் சுய-ஏற்றுக்கொள்வதற்கான ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும். சுய இரக்கத்தை வளர்த்துக்கொள்வதன் மூலமும், யதார்த்தமான இலக்குகளை நிர்ணயிப்பதன் மூலமும், ஒரு நேர்மறையான சமூக சூழலைக் கட்டியெழுப்புவதன் மூலமும், ஆதரவான உறவுகளைக் கட்டியெழுப்புவதன் மூலமும், பாதிப்பைத் தழுவுவதன் மூலமும், பெண்கள் பரிபூரணவாதத்தின் எல்லையிலிருந்து விடுபடலாம். உங்கள் உண்மையான சுயத்தை தழுவிக்கொள்வது வெறும் விடுதலை அல் மகிழ்ச்சியான மற்றும் அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ இது அவசியம்.

சமூக அழுத்தத்தின் தோற்றத்தைப் புரிந்துகொள்வதன் மூலமும், நடைமுறை உத்திகளைப் பயன்படுத்துவதன் மூலமும், பெண்கள் இந்த சவால்களை பின்னடைவு மற்றும் நம்பகத்தன்மையுடன் வழிநடத்த முடியும், இறுதியில் அவர்களின் தனித்துவமான சுயத்தை நம பிக்கையுடனும் கருணையுடனும் தழுவிக்கொள்ளலாம்.

# அமெரிக்காவில் கடும் பனிப்பொழிவு: 7 மாகாணங்களில் அவசரநிலை அறிவிப்பு!





கடும் பனிப்பொழிவால் அமெரிக்காவின் பல மாகாணங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. பல மாகாணங்கள் அவசர நிலையை அறிவித்துள்ளன. கான்சாஸ், இண்டியானா, மிசோரி, கென்டக்கி, லுயிஸ் வில்லி உள்ளிட்ட 7 மாகாணங்கள் அவசர நிலையை அறிவித்துள்ளன.

புவி வெப்பமயமாதல் தாக்கத்தின் மறுவடிவமாக மாறிவரும் பருவநிலை வளர்ந்த நாடு, ஏழை நாடு என பார்க்காமல் எல்லா நாடுகளையும் கடுமையாக பாதித்து வருகிறது. இந்நிலையில் கான்சாஸ் மற்றும் இண்டியானா மாகாணங்களில் 7.7 அங்குலங்கள் (19.5 செ.மீ) பனிப்பொழிவு பதிவாகியுள்ளது.

கென்டக்கியின் லெக்சிங்டன், பனிப்பொழிவில் சாதனையை படைத்துள்ளது. அங்கு சாலையில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள் பனியில் புதைந்துள்ளன.

வர்ஜீனியா, இண்டியானா, கன்சாஸ் மற்றும் கென்டக்கி ஆகிய இடங்களில் பனிப் பொழிவால் நூற்றுக்கணக்கான கார்கள் சறுக்கி விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

வடகிழக்கு கன்சாஸில் உள்ள நெடுஞ்சாலைகள் நடக்க முடியாத அளவுக்கு இருப்பதால் அந்த சாலைகள் மூடப்பட்டுள்ளன. கடும் பனிப்பொழிவால் 60 மில்லியன் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவில் பனிப் பொழிவு மேலும் அதிகரிக்கும் என அங்குள்ள வானிலை மையம் தெரிவித்துள்ளது. வேகமாக வெப்பமடையும் ஆர்க்டிக் துருவச் சுழலின் அதிகரிப்பு காரணமாக பனிப்பொழிவு அதிகரிக்கலாம் என ஆய்வுகள் கூறியுள்ளது.

## கிழக்கு கடல் பகுதியில் வீசப்பட்ட வடகொரியா ஏவுகணை!



உலக நாடுகளின் எதிர்ப்பை மீறி வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது. அந்த வகையில் இன்றும் வட கொரியா கிழக்கு கடல் பகுதியில் ஏவுகணையை செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகொரியாவின் குறித்த நடவடிக்கையை அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகள் கடுமையாக எதிர்த்து வருகின்ற நிலையில் கொரிய தீபகற்பம் மற்றும் ஜப்பானுக்கு இடையே உள்ள நீரில் இறங்குவதற்கு முன் 1,100 கிலோமீட்டர் (685 மைல்) தூரம் ஏவுகணை பறந்ததாகவும் தென்கொரிய இராணுவம் தெரிவித்தது.

வட கொரிய தலைநகரான பியாங்யாங்கிற்கு அருகில் உள்ள பகுதியில் இருந்து ஏவுகணை ஏவப்பட்டதாகவும், அமெரிக்கா மற்றும் தென் கொரிய இராணுவத்தினரால் ஏவுகணை ஏற்பாடுகள் முன்கூட்டியே கண்டறியப்பட்டதாகவும் தெற்கின் கூட்டுப் படைத் தலைவர்கள் தெரிவித்தனர்.

## கனடா பிரதமர் பதவியை இராஜினாமா செய்யும் ஜஸ்டின் ட்ரூடோ?



கனடா நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, லிபரல் கட்சித் தலைவர் பதவியை இராஜினாமா செய்ய இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இதனை தி குளோப் மற்றும் மெயில் தங்களுக்கு கிடைத்த தகவல்களில் ஜஸ்டின் ட்ரூடோ இராஜினாமா செய்ய இருப்பதாக செய்தி வெளியிட்டுள்ளது.

அதில், தெரிவித்தபடியே ஜஸ்டின் ட்ரூடோ எப்போது இராஜினாமா பற்றி அறிவிப்பார் என்பது பற்றி தங்களுக்கு நிச்சயமாகத் தெரியாது, ஆனால் புதன்கிழமை நடைபெற இருக்கும் செயற்குழு கூட்டத்திற்கு முன்பு அது நடக்கும் என்று அவர்கள் எதிர்பார்ப்பதாக குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

இந்த தகவல் பற்றிய கேள்விக்கு கனடா பிரதமர் அலுவலகம் உடனடி பதில் அளிக்கவில்லை. ட்ரூடோ உடனடியாக வெளியேறுவாரா அல்லது புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை பிரதமராக நீடிப்பாரா என்பது தெளிவாகத் தெரியவில்லை என்று அறிக்கை மேலும் கூறியுள்ளது.

2013 ஆம் ஆண்டு லிபரல் கட்சியின் தலைவராக ட்ரூடோ பொறுப்பேற்றார். அப்போது கட்சி ஆழ்ந்த சிக்கலில் இருந்தபோது முதல் முறையாக ஹவுஸ் ஆஃப் காமன்ஸில் மூன்றாவது இடத்திறகுத் தள்ளப்பட்டது.

ட்ரூடோவின் விலகல், அக்டோபரின் பிற்பகுதியில் நடைபெற இருக்கும் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சியிடம் லிபரல் கட்சி மோசமான தோல்வியை சந்திக்கும் என்று கருத்துக் கணிப்புகள் வெளியாகி உள்ள நிலையில், லிபரல் கட்சிக்கு நிரந்தர தலைவர் இல்லாமல் போயகும் வாய்ப்பு உருவாகி இருக்கிறது.

# தென் கொரிய முன்னாள் அதிபரை கைது செய்ய தயாராகும் பொலிஸ்!

தென்கொரிய முன்னாள் அதிபர் யூன் சுக் இயோலை எந்நேரத்திலும் கைது செய்யும் வாய்ப்பு உள்ளதாக தென் கொரிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக தென் கொரியா நாட்டில் பட்ஜெட் மசோதா தொடர்பாக ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதையடுத்து அந்நாட்டு அதிபர் யூன் சுக் இயோல் அவசர நிலை இராணுவ சட்டத்தை அமல்படுத்தினார். இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியதால் சில மணி நேரங்களில் அந்த அறிவிப்பை அதிபர் திரும்ப பெற்றார்.

இந்த விவகாரத்தில் பாராளுமன்றத்தில் அவருக்கு எதிராக தீர்மானம் கொண்டு வரப்பட்டு பதவி நீக்கம் செய்யப்பட்டார். அவர் மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக புலனாய்வு அதிகாரிகள் விசாரித்து வந்தனனர். மேலும், கடந்த வாரம் யூன் சுக் இயோலை கைது செய்யும் முயற்சியிலும் புலனாய்வு அதிகாரிகள் இறங்கினர்.

யூன் சுக் இயோல் கைது நடவடிக்கையை எதிர்த்து அவரது ஆதாரவாளர்கள் பெருமளவில் திரண்டு வந்து போராட்டம் நடத்தினர். யூன் சுக் இயோல் எந்நேரத்திலும், கைது செய்யப்படலாம் என்ற நிலையில், புலனாய்வு அதிகாரிகளின் கைது முயற்சி வெற்றிபெறவில்லை. இது தொடர்பாக கடந்த வாரம் புலனாய்வு அதிகாரிகள் மற்றும் இராணுவ அதிகாரிகள் இடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது.

யூன் சுக் இயோலை கைது செய்ய புலனாய்வு அதிகாரிகள் தவறியதை அடுத்து, தென் கொரிய ஊழல் தடுப்பு துறையினர் பொலிஸாரின் நடவடிக்கையை எதிர்நோக்கியுள்ளனர். இது தொடர்பாக தென் கொரிய ஊழல் தடுப்பு துறை மற்றும் பொலிஸார் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது.

யூன் சுக் இயோலை கைது செய்வதற்கான உத்தரவு காலாவதியாக உள்ளது. இதையடுத்து, யூன் சுக் இயோலை கைது செய்ய புதிய உத்தரவு பிறப்பிக்க கோரி ஊழல் தடுப்பு துறையினர் நீதிமன்றத்தை நாடவுள்ளனர்.

## அரிசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"அரிசி விலை மற்றும் பதுக்கல் தொடர்பில் கவனம் செலுத்தி 2024 ஆம் ஆண்டு அரிசி விற்பனை தொடர்பாக வடக்கு மாகாணத்தில் 774 விசேட சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் வவுனியா மாவட்டத்தில் அரிசி தொடர்பில் 126 விசேட சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும், வடக்கு மாகாணத்தில் பெரியளவிலான பதுக்கல்கள் எதுவும் இடம்பெறவில்லை." - என்றார்.

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)













தயாரிக்கப்பட்ட இப்பாடலானது மாணிக்கம் ஜெகனின் பாடல் வரிகளில், சங்கீர்த்தனனின் குரலில், சிவ. பத்மஜனால் இசையமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும், கையெழுத்துப் போராட்டத்துக்குத் தலைமையேற்று கருத்துரையாற்றிய யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் சி.சிவகஜன், "தமிழ் அரசியல் கைதிகளின் கைதானது தனியே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பார்க்கப்படக் கூடிதொன்றல்ல மாறாக அனைத்துலக மயமாக்கப்பட வேண்டிய தமிழினப் படுகொலையின் நீட்சியேயாகும்." - என்று குறிப்பிட்டார்.

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

















யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார், யாழ். பல்கலைக்கழகக் கலைத்துறை பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ரகுராம், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்.ஐங்கரநேசன், யாழ். மாநகர சபையின் முன்னாள் மேஜர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன், குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் உள்ளிட்ட பிரமுகர்கள், மதத் தலைவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்

## 13ஆம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டுப் பயணம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. கடந்த மாதம் டில்லிக்குப் பயணம் மேற்கொண்டு முக்கியத்துவமிக்க சந் திப்புகளை நடத்தி இருந்த நிலையிலேயே ஜனாதிபதி அநுரவின் பீஜிங் பயணமும் இடம்பெறுகின்றது.

குறித்த விஜயத்தின்போது சீன ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட தரப்பினருடன் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பேச்சு நடத்தவுள்ளார். இரு தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படவுள்ளன. வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேறத்துடன் ஜனாதிபதியுடன் செல்லவுள்ளார்.

## புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் வலியுறுத்தியுள்ளார். அரசு தனது பதவிக் காலம் முடிவடையும் வரை காத்திருக்காமல் புதிய அரசமைப்பை உருவாக்கும் நடவடிக் கைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். சபாநாயகர் ஜகத் விக்கிரமரட்ணவுடனான இன்றைய சந்திப்பின் பின்னர் பேராயர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் இருவரும் எலிக் காய்ச்சல் காரணமாக உயிரிழந்திருக்க லாம் எனச் சந்தேகிக்கப்படுவதாக கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.வினோதன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் இன்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே இந்த விடயத்தை அவர் கூறினார். எனவே, மக்கள் காய்ச்சல் ஏற்பட்டாலும் மற்றும் தசைநோ, கண் சிவத்தல், சுவாசப் பிரச்சினைகள் போன்றவை காணப்பட்டாலும் உடனடியாக வைத்திய பரிசோதனை செய்து கொள்ளுமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

இதைவிட தற்போதைய பனியுடனான காலநிலையில் சளி அதிகரித்து நிமோனியா போன்ற காய்ச்சலும் ஏற்படவாய்ப்புண்டு. அதைவிட மழையுடனான காலநிலையைத் தொடர்ந்து டெங்கு நோயின் தாக்கமும் அதிகரித்துள்ளது. இதிலும் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கொடூரமாக வெட்டிக்கொலை



கொழும்பு, ஜன 06

கண்டி, வத்தேகம பிரதேசத்தில் நபர் ஒருவர் கொலை செய்யப்பட்டதையடுத்து, மக்கள் வீதிக்கு இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையால் அங்கு பதற்றமான நிலை ஏற்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் நேற்று பிற்பகல் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் வத்தேகம பகுதியை சேர்ந்த 38 வயதுடையவராகும்.

குற்றச் செயல்களுடன் தொடர்புடைய ஏனைய சந்தேக நபர்களைக் கண்டறிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வத்தேகம பொதுச் சந்தையில் மீன் வியாபாரியான இவர், நேற்று முன்தினம் இரவு தனது வீட்டுக்கு முன்னால் வைத்து வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

ஆபத்தான நிலையில் கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று மலர்சாலையில் இருந்து அவரது சடலம் வத்தேகம பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்ட போது, குற்றவாளிகளை கைது செய்யுமாறு கோரி சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்காரணமாக வத்தேகம நகரில் பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது. (ஐ)

# 100 கோடி ரூபாய் பரிவர்த்தனை: இரத்தினக்கல் கண்காட்சி

கொழும்பு, ஜன 06

கொழும்பு இரத்தினகற்கள் கண்காட்சியில் 100 கோடி ரூபாய் பெறுமதியான பரிவர்த்தனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இரத்தினகற்கள் மற்றும் ஆபரணக் கண்காட்சி வார இறுதி நாட்களில் கொழும்பு - உலக வர்த்தக மையத்தில் நடைபெற்றது.

மதிப்பு 2.5 கோடி ரூபா இதன்போது, குறித்த கண்காட்சியில் இரத்தினக்கல் வர்த்தகர்கள் மற்றும் கொள்வனவாளர்கள் அதிகளவில் பங்குபற்றினர்.

இதில் சுமார் இரண்டாயிரத்திற்கும் அதிகமான கொள்வனவாளர்கள் கலந்து கொண்டு 100 கோடி ரூபாவுக்கும் அதிகமான பரிவர்த்தனைகளை மேற் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், குறித்த கண்காட்சியின் போது, 20 கரட் நீல இரத்தினம் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதன் மதிப்பு 2.5 கோடி ரூபாயாகும் என மதிப்பிடப்படப்பட்டுள்ளது. (ஐ)







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.01.2025 இல் வெளியிடப்பெற்றது.